வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

98—

சார்–பதிவாளர் அலுவலகம்

***8403—திருமதி ப. மனோன்மணி:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீரபாண்டி தொகுதி, பனமரத்துப்பட்டியில் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் கோரியுள்ள சேலம் மாவட்டம், வீரபாண்டி தொகுதி, பனமரத்துப்பட்டியில் புதிய சார்-பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்பதை மக்களின் மனதில் பதிய வைத்து, சமுக நீதி காத்த வீராங்கனையாய், தென்னகத்து ஜான்சிராணியாக, தமிழகத்தின் அன்னையாக, மனித நேயத்தில் அன்னை தெரசாவாக, தொட்டில் குழந்தைத் திட்டம் தந்து, பிஞ்சுக் குழந்தைகளைக் காத்திட்ட பூமாதேவியாகத் திகழ்ந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் குடும்பத்தினை வாழவைத்த மனிதப் புனிதர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றி மலர்களைத் தூவி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

2017 ஜுன் 28]

முற்பகல் 10–55

இந்த மாமன்றத்தில் அமர்ந்து, சட்டமன்ற உறுப்பினராகப் பேசக்கூடிய வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த, எங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறி, வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'அம்மா'–விற்கும் மூன்றெழுத்து: 'ஆட்சி'–க்கும் மூன்றெழுத்து; மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், நல்லாட்சியைத் திறம்பட நடத்திவரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் 'நன்றி' என்ற மூன்றெழுத்தின் மூலமாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்குப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீரபாண்டி தொகுதி, பனமரத்துப்பட்டியில் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வீரபாண்டி தொகுதியில் ஒரு சார்–பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. அதனைத் தொடர்ந்து அருகில் இருக்கக்கூடிய தாதகம்பட்டியிலும் ஒரு சார்–பதிவாளர் அலுவலகம் இயங்கி வருகிறது. இதன் மத்தியிலே, 15 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பனமரத்துப்பட்டியில் இருக்கக்கூடிய மக்களெல்லாம், தாதகம்பட்டியில் இருக்கக்கூடிய சார்–பதிவாளர் அலுவலகத்திலே தங்களது உடைமைகளை தற்போது பதிவு செய்து வருகிறார்கள். ஆகவே, இவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகில் தாதகம்பட்டி இருக்கின்ற காரணத்தினால், தற்சமயம் பனமரத்துப்பட்டியில் சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு குறைவாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. மனோன்மணி அவர்கள்.*

திருமதி ப. மனோன்மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வீரபாண்டி தொகுதியில், சுமார் 50,000 மக்கள் வசித்து வரும் பனமரத்துப்பட்டிக்கு அருகில் சார்–பதிவாளர் அலுவலகம் ஏதுமில்லை என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். சார்–பதிவாளர் அலுவலகம் செல்ல வேண்டுமானால், 15 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டியுள்ளது. எனவே, மக்களின் நலன் காக்கும்விதமாக, எனது தொகுதி மக்களின் கோரிக்கையினை மறுபரிசீலனை செய்து, சார்–பதிவாளர் அலுவலகம் அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–ல் புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைக்க முடியாது என்கின்ற ஒரு கொள்கை முடிவு அரசால் எடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களைக் காட்டிலும், நம்முடைய மாநிலத்தில் மட்டும்தான் 575 சார்–பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உதாரணமாக, குஜராத்தில் 155, அதற்கு அடுத்தபடியாக கர்நாடகாவில் 242, கேரளாவில் 310, ஆந்திராவில் 432 மற்றும் மகாராஷ்ட்ராவில் 467 அலுவலகங்கள்தான் இயங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் மட்டும்தான் 575 சார்–பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. அதுமட்டுமில்லாமல் 3 முகாம்களின் மூலமாகப் பதிவு செய்யக்கூடிய வகையிலும் இருக்கின்றன. ஆக மொத்தம் 578 அலுவலகங்கள் இருக்கின்றன. ஆகவே, இதில் கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால், புதிதாக சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. அப்படி கொள்கை முடிவுகளை மாற்றியமைக்கும் பட்சத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய*

2017 ஜூன் 28]

உத்தரவின்பேரில், அவர்களுடைய சேலம் மாவட்டம், வீரபாண்டிக்கு அருகில் இருக்கக்கூடிய பனமரத்துப்பட்டியில் ஒரு புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாகச் செய்யும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகரத்தில் மட்டும் 2 சார்–பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அந்த இரண்டு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாம்பரம் நகரத்தில் இரண்டு சார்–பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருவதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த இரண்டு அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்த இரண்டு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*